# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2112/41 - 2019 පෙබරවාරි මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.28

***2112/41 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், பொலன்னறுவை கிழக்கு நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ், சேவாகம நிலக்கீழ் நீர்த்தாங்கியை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்துரிமையை பெற்றுக் கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த,*
*பத்தரமுல்லை.*
*2019, பெப்புருவரி 15.*
*5/2/1/1433.*

**அட்டவணை**

*வடமத்திய மாகாணத்தின், பொலன்னறுவை மாவட்டத்தில், தமன்கடுவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 200, சேவாகம கிராம அலுவலர் பிரிவில், சேவாகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் ஜெனரால் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல.* FCP *பொ13 இல் படிவ இல. 52 இன் மேலதிக இலக்கம் 40 என்ற வரைபடத்தில் காணித்துண்டு இல. 1049 இன் பகுதியாக குறிப்பிடப்படும் "அலி கொட்டுவ இலக்கம் 105" என்னும் காணியில் கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 80 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய காணித்துண்டு :*

காணித்துண்டு : துண்டு இல. 1049 இன் பகுதி;
காணியின் பெயர் : அலி கொட்டுவ இல. 105;
விஸ்தீரணம் : 80 பேர்ச்சஸ்
வடக்கு : துண்டு இல. 1049 இற்கு உரிய இக் காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : துண்டு இல. 1049 இற்கு உரிய இக்காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : துண்டு இல. 1049 இற்கு உரிய இக் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : துண்டு இல. 1795 இற்கு உரிய இக் காணியின் எஞ்சிய பகுதி.

உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : டபிள்யூ. ஜீ. பிரேமதாச,
இல. 149, யாய 09 வீதி,
வெவேதென்ன,
பொலன்னறுவை.

03 -767

---

திருத்தம்

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2034/7 ஆம் இலக்க 2017.08.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கம் 1A ஆம் பக்கத்தில் இலக்கம் 9-264 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையில் கிராம அலுவலர் பிரிவு இல. 659 தீகிரிமடவல என குறிப்பிடப்பட்டிருப்பினும், அது கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 02 இற்கு உட்பட்டு இருப்பதால், சிரிமல்வத்த-பல்லேகம கிராம அலுவலர் பிரிவும் இதற்கு உட்பட வேண்டும் என திருத்தியமைக்கப்பட வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த,
பத்தரமுல்லை,
2019, பெப்புருவரி 15.
5/2/1/1275.

03-754